ராமசாமி, நிர்வாக இயக்குநர், ராயல் டெக்ஸ்டைல்ஸ், கோவில்பட்டி அங்கத்தினராகவும், சுப்பையா, நிர்வாக இயக்குநர், கருணைபாண்டியன் மில்ஸ், கோவை அங்கத்தினராகவும், கலீல் நிர்வாக இயக்குநர் ரத்னவேலு டெக்ஸ்டைல்ஸ், கோவை மற்றும் திரு. கண்ணன் முன்னாள் தலைவர், சைமா உறுப்பினர்களாகவும், டமான் பிரகாஷ், நிர்வாக இயக்குநர், சம்பா டெக்ஸ்டைல்ஸ் உறுப்பினராகவும் இது போன்ற 15 பேரை அங்கத்தினர்களாகக்கொண்ட ஒரு நிபுணர் குழு புரட்சித் தலைவியினுடைய ஆலோசனைகளுக்கிணங்க நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்களா என்பதை அறிய விரும்புவதோடு, இந்தக் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான ''கைடு லைன்ஸ்'' தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் சிறந்த முறையில் நூற்பாலைகள் நடத்தி வருகின்ற ஐயவர்த்தனவேலு, எல். அண்டு டபிள்யூ. போன்றவர்களும், சைமா, சிட்ரா போன்ற அமைப்புகளின் தலைவர்களும் இதில் அங்கம் பெற்றிருக்கிறார்கள். ''சைமா'' என்றால் ''சவுத் இந்தியா மில்ஸ் அசோசியேஷன்'' சிட்ரா போன்ற அமைப்புகளைச் சார்ந்த சிறந்த ஆற்றல் படைத்தவர்களை எல்லாம் இதில் போட்டிருப்பதால் எதிர்காலத்தில் நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் –இப்போதே சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றன—செயல்படும். பருத்தி பற்றாக்குறையின் காரணமாகத் தான்—அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை அந்த சட்டச் சிக்கலுக்குள்—அதன் காரணமாகத்தான் நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை நான் உங்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 27, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

27—

நிலக்கோட்டை தொகுதி, பேரணைப் பாலத்தைச் செப்பனிடுதல்

* 9761—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, பேரணையில் கட்டப்பட்ட பாலம் எப்போது கட்டப்பட்டது?

[1994 மார்ச் 18

(ஆ) அப்பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளதைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பேரணையில் கட்டப்பட்டிருக்கின்ற பாலம் 1898 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

(ஆ) அப் பாலத்திலுள்ள பழுதுகள் எல்லாம் சரி செய்யப் பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 100 ஆண்டுகளாகப் போகின்றது இந்தப் பாலம் கட்டி. ஏதோ ஆங்கிலேயர்கள் கட்டிய இந்தப் பாலம் இந்த அளவிற்கு சிறப்பான முறையில் இத்தனை காலமாக இருந்திருக்கின்றது. இப்போது சமீபத்தில் வந்த வெள்ளத்தினால் இந்தப் பாலம் உடைந்து மண்ணைப் போட்டு நிரப்பி நாம் அதைச் சரி செய்திருக்கின்றோம். எனவே இதை மறு பரிசிலனை செய்து, இந்த நடப்பாண்டிலே அதற்குப் பணம் ஒதுக்கி எஸ்டிமேட் தயார் செய்து இந்த வேலையை ஆரம்பித்து முடித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் போக்குவரத்திற்காக, பேருந்துகளோ மற்ற வாகனங்கள் போக்குவரத்திற்காக கட்டப்பட்டதல்ல; நடைபாதையாக பயன்படுத்துவதற்காக கட்டப்பட்ட பாலம். இதில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்திலே பாதிப்பு ஏற்பட்டு, இந்தப் பாலம் சரி செய்யப்பட்டிருக்கிறது. புதிதாகப் பாலம் கட்டுவதற்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறைக்கு பொதுப் பணித்துறை யினுடைய தலைமைப் பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார். அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தப் பாலத்திற்குள்ள சிறப்பு என்ன வென்றால் அங்கே வைகையிலே இந்தப்பேரணைக்குப் பக்கத்திலே ஒரு சிறப்பு வாய்ந்த அனுமார் கோயில் இருக்கிறது. ஆஞ்சநேயர், கோயில் இருக்கிறது. அந்த ஆஞ்சநேயர் கோவிலுக்கு பம்பாய் கல்கத்தா, டெல்லி, போன்ற இடங்களில் உள்ள தமிழர்கள் எல் லாம் வருகிறார்கள். அது மாத்திரம் அல்ல அந்தப் பாலத்தை நாம் கட்டிவிடுவோமேயானால் பம்பாயிலிருந்து நேரிடையாக திருவனந்தபுரம் போவதற்கும், கன்னியாகுமரி போவதற்கும்

1994 மார்ச் 18]

மிகப் பெரிய அளவில் பயன் உள்ளதாக இருக்கும். ஆகையினாலே அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்த நடப்பு ஆண்டிலேயாவது அதற்கு எஸ்டிமேட் தயார் செய்து-மத்திய அரசிடம் கூட கேட்கலாம்-பணம் ஒதுக்கி அந்த வேலைகளைத் துவங்குவதற்கு முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல அந்தப் பேரவையினுடைய பொறுப்பு பொதுப்பணித் துறையில் இருக்கிறது. பாலம் கட்ட வேண்டிய பொறுப்பு நெடுஞ்சாலைத் துறையிடம் இருக்கிறது. ஆகவேதான் பொதுப்பணித் துறையினர் அந்தப் பாலம் கட்டலாம் என்று நெடுஞ்சாலைத் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அதற்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு கருதுகிறது. அதற்கான புரபோசல் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

28—

கோழிப் பண்ணைக்கு இலவச மின்சாரம் வழங்குதல்.

* 16438—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் அளிப்பதைப் போல் கோழிப் பண்ணைக்கும் இலவச மின்சாரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.